
**ஏப்ரல் – 15**

# TNPSC துளிகள்

- மிகவும் புகழ்பெற்ற காஞ்சிபுரம் பருத்தி சேலை மற்றும் இராசிபுரம் பட்டுப் புடவை நெசவாளர்கள் புவி சார் குறியீடு (GI) பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.
- குஜராத்தின் நவ்சாரி என்ற மாவட்டத்தில் உள்ள கிராமத்திலிருந்து அதன் பெயரைப் பெற்ற அமல்சாத் சிக்கூ எனும் பழமானது புவிசார் குறியீட்டினை (GI) பெற்று உள்ளது.
- சத்தீஸ்கர் மாநில முதல்வர் நியூ ராய்ப்பூர் நகரில் அமைக்கப்பட உள்ள மாநிலத்தின் முதல் காலியம் நைட்ரைடு (GaN) அடிப்படையிலான குறைக்கடத்தி மீதான உற்பத்தி மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- ஜப்பான் நாடானது, முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட உலகின் முதல் இரயில் நிலையத்தினை வெறும் ஆறு மணி நேரத்தில் கட்டமைத்துள்ளது.
- 62வது தேசிய கடல்சார் தினத்தின் போது, சினெர்ஜி மரைன் குழுமத்தின் நிறுவனர் இராஜேஷ் உன்னி 2025 ஆம் ஆண்டு தேசியக் கடல்சார் வருணா என்ற விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டும் காணப்படுகின்ற வட்டார மற்றும் எளிதில் பாதிக்கப் படக் கூடிய ஒரு இனமான மலபார் சாம்பல் இருவாட்சிகளை மிகவும் நன்கு பாதுகாப்பதற்கான திட்டத்திற்காக என்று கேரளாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுவிற்கு வேண்டி, வளங்காப்பு முன்னணித்துவத் திட்டத்தின் (CLP) எதிர்கால வளங் காப்பாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- பாரதீப் துறைமுகமானது, இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களில், 150.41 மில்லியன் மெட்ரிக் டன் (MMT) அளவிலான சரக்குகளைக் கையாண்டு, அதனால் சரக்குகளைக் கையாளுதலில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக அதன் முதலிடத்தினைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வானிலை முன்னறிவிப்புகளுக்கான வெப்பக் குறியீடு


NWS Heat Index

Temperature (°F)

| Relative Humidity (%) | 80 | 82 | 84 | 86 | 88 | 90 | 92 | 94 | 96 | 98 | 100 | 102 | 104 | 106 | 108 | 110 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 40 | 80 | 81 | 83 | 85 | 88 | 91 | 94 | 97 | 101 | 105 | 109 | 114 | 119 | 124 | 130 | 136 |
| 45 | 80 | 82 | 84 | 87 | 89 | 93 | 96 | 100 | 104 | 109 | 114 | 119 | 124 | 130 | 137 | |
| 50 | 81 | 83 | 85 | 88 | 91 | 95 | 99 | 103 | 108 | 113 | 118 | 124 | 131 | 137 | | |
| 55 | 81 | 84 | 86 | 89 | 93 | 97 | 101 | 106 | 112 | 117 | 124 | 130 | 137 | | | |
| 60 | 82 | 84 | 88 | 91 | 95 | 100 | 105 | 110 | 116 | 123 | 129 | 137 | | | | |
| 65 | 82 | 85 | 89 | 93 | 98 | 103 | 108 | 114 | 121 | 128 | 136 | | | | | |
| 70 | 83 | 86 | 90 | 95 | 100 | 105 | 112 | 119 | 126 | 134 | | | | | | |
| 75 | 84 | 88 | 92 | 97 | 103 | 109 | 116 | 124 | 132 | | | | | | | |
| 80 | 84 | 89 | 94 | 100 | 106 | 113 | 121 | 129 | | | | | | | | |
| 85 | 85 | 90 | 96 | 102 | 110 | 117 | 126 | 135 | | | | | | | | |
| 90 | 86 | 91 | 98 | 105 | 113 | 122 | 131 | | | | | | | | | |
| 95 | 86 | 93 | 100 | 108 | 117 | 127 | | | | | | | | | | |
| 100 | 87 | 95 | 103 | 112 | 121 | 132 | | | | | | | | | | |

Likelihood of Heat Disorders with Prolonged Exposure or Strenuous Activity

Caution | Extreme Caution | Danger | Extreme Danger

- சென்னையின் பிராந்திய வானிலை ஆய்வு மையம் ஆனது, வெப்பக் குறியீட்டைத் தற்போது சோதனை அடிப்படையில் பயன்படுத்தி வருகிறது.

- இதைப் பயன்படுத்துவதன் மூலம், வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் ஆகியவை இந்த மாநிலத்தில் வாழும் மனிதர்களின் அசௌகரியத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதை இது முன்னறிவிக்க உள்ளது.
- தமிழ்நாட்டிற்கான வெப்பக் குறியீட்டு வரைபடங்கள் ஆனது தற்போது வானிலை முன்னறிவிப்பாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன என்பதோடு இவை அதிக வெப்ப நிலை மற்றும் உண்மையில் நாம் உணரும் வெப்பநிலையில் ஈரப்பதத்தின் தாக்கம் பற்றிய தகவல்களை வழங்குகின்றன.
- சோதனை அடிப்படையிலான இந்த வெப்பக் குறியீட்டிற்கு சிவப்பு, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு போன்ற வண்ண குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.
- குடிமக்களின் அசௌகரியம் மற்றும் வெப்பம் தொடர்பான நோயகளை மிகவும் நன்கு குறைப்பதற்காக வேண்டி ஒரு கூடுதல் கவனிப்பை மேற்கொள்ளும் முயற்சியினைத் தொடங்குவதற்கான வழிகாட்டுதல்களை இது வழங்கும்.
- மண்ணின் வெப்பநிலை உட்பட பல்வேறு வேளாண் சார்ந்த வானிலை அளவுருக்களை அளவிடுவதற்காக வேண்டி மாநிலம் முழுவதும் மொத்தம் 22 வேளாண் சார் வானிலை தானியங்கி வானிலை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது.
- தமிழ்நாடு மாநிலத்தில் கன்னியாகுமரி உட்பட மேலும் இரண்டு டாப்ளர் வானிலை ரேடார் கருவிகள் அமைக்கப்படவுள்ளது.

## தமிழ்நாட்டில் சமக்ர சிக்ஷா

At a glance

The fund allocation and disbursal by the Union government, and the State's share of funding under the Samagra Shiksha scheme

| Year | Proposed allocation | Actual disbursal | State's share |
|---|---|---|---|
| 2018-19 | 1,497.50 | 1,474.44 | 9,48.34 |
| 2019-20 | 1,801.73 | 1,769.12 | 1,114.48 |
| 2020-21 | 1,649.96 | 1,621.54 | 1,099.97 |
| 2021-22 | 1,649.96 | 1,598.82 | 1,099.97 |
| 2022-23 | 2,117.59 | 2,107.23 | 1,316.11 |
| 2023-24 | 2,090.76 | 1,871.96 | 1,393.84 |
| 2024-25 | 2,151.59 | - | 1,434.39 |


*Note: Unused funds for the year gets carried over*

- மத்திய அரசானது, சமக்ர சிக்சா அபியான் (SSA) என்ற திட்டத்தின் கீழ் இது வரையில் தமிழ்நாடு மாநிலத்திற்கு 10,443 கோடி ரூபாய்க்கு மேல் நிதி வழங்கியுள்ளது.
- SSA திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு பெற்ற கடைசி நிதி தவணை ஆனது 2023-24 ஆம் நிதியாண்டில் 1,871 கோடி ரூபாய் ஆகும்.
- அதன் பின்னர், 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் விதிகளை தமிழ்நாடு ஏற்க மறுத்ததால், மத்திய அரசானது 2,152 கோடி ரூபாய் மதிப்பிலான தமிழகத்தின் பங்கினை நிறுத்தி வைத்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டில், சர்வ சிக்சா அபியான் திட்டமானது மறுபெயரிடப்பட்டு SSA திட்டத்தில் இணைக்கப்பட்டது.
- 2018-19 ஆம் ஆண்டில், மத்திய அரசு ஆனது தமிழ்நாட்டிற்கு 1,474 கோடி ரூபாய் நிதி வழங்கியது.
- 2023-24 ஆம் ஆண்டில், இந்தத் திட்டத்தின் கீழ் மாநிலம் 1,871 கோடி ரூபாய் நிதியைப்

பெற்றது என்பதோடு இது கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவான 26% அதிகரிப்பு ஆகும்.

- இந்த ஆண்டு மார்ச் மாதத்தில், மத்திய அரசு நிறுத்தி வைத்திருந்த 2,152 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு வழங்க முடிவு செய்தது.
- NEP கொள்கையின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மும்மொழிக் கொள்கையினைச் செயல் படுத்தத் தமிழக அரசு மறுத்ததாலும், PM-SHRI (PM Schools for Rising India) நிறுவுவது தொடர்பான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்திட்டதாலும் நிதி நிறுத்தம் மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படுகிறது.


## தமிழ்நாடு அரசின் 10 புதிய சட்டங்கள் மீதான அறிவிக்கை




- தமிழக அரசானது வரலாற்றில் மிகவும் முதல் முறையாக, ஆளுநரிடமிருந்து அல்லது குடியரசுத் தலைவரிடமிருந்து ஒப்புதல் எதுவும் பெறாமல் 10 சட்டங்களை அறிவித்து உள்ளது.
- இந்த நடவடிக்கையானது இந்தியச் சட்டமியற்றலின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சமீபத்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பால் செயலாக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் தேதியன்று, தமிழ்நாடு அரசு ஆனது மாநில அரசிதழில் 10 சட்டங்களை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- இந்தச் சட்டங்கள் முன்னர் மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, ஆனால் அதற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் வைத்த நிலையில், ஒரு சிறப்பு அமர்வில் மீண்டும் அந்தச் சட்டங்கள் மீண்டும் ஏற்றுக் கொள்ளப் பட்டு பின்னர் அவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டது.
- பெரும்பாலான இந்தச் சட்டங்கள் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களின் நியமனங்கள், ஆளுநர் மற்றும் வேந்தரிடம் உள்ள அதிகாரங்களைப் பறித்து, அதற்குப் பதிலாக தற்போது அரசாங்கத்திடம் வழங்கும் விதிமுறைகளைக் கொண்டுள்ளன.
- உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஆனது நீதித்துறை மறு ஆய்வுக்கு உட்படாதவற்றை நீதித் துறை மறு ஆய்வின் கீழ் கொண்டு வந்துள்ளது என்பதோடு மேலும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஒப்புதலை வழங்கும் விதியையும் அறிமுகப் படுத்தியுள்ளது.

- தற்போது, இந்தத் தீர்ப்பு இந்தியா முழுவதற்கும் பொருந்தும்.
- எதிர்காலத்தில் உருவாக்கப்பட உள்ள மசோதாக்கள் குறித்து ஆளுநர்கள் முடிவெடுக்க உச்ச நீதிமன்றம் ஒன்று முதல் மூன்று மாதங்கள் வரை காலக்கெடுவை நிர்ணயித்து உள்ளதால், அனைத்து மாநிலங்களின் ஆளுநர்களும் அதற்கு இணங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- கண்டிப்பாக, அரசியலமைப்புச் சட்டம் சார்ந்த ஒரு பெரும் பிரச்சினையானது ஐந்து பேர் கொண்ட அமர்வினால் முடிவு செய்யப்பட வேண்டும் என்று அரசியலமைப்பு பரிந்துரைப்பதால், இரண்டு பேர் கொண்ட அமர்வானது ஓர் அரசியலமைப்புச் சட்டப் பிரச்சினையை முடிவு செய்திருக்க முடியுமா என்பதும் இனி விவாதத்திற்குரியதாக அமையும்.

## தமிழ்நாடு Vs ஆளுநர் வழக்கு 2025





- தமிழ்நாடு அரசு மற்றும் ஆளுநர் R.N. ரவி இடையிலான வழக்கு தொடர்பான தனது தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.
- மசோதாக்கள் குறித்து குடியரசுத் தலைவர் முர்மு அவர்கள் எடுத்த தொடர்ச்சியான நடவடிக்கைகளை நீதிமன்றம் சரிக்குச் சமமாக ரத்து செய்துள்ளது.
- ஆளுநரின் தனிப்பட்ட அதிருப்தி, அரசியல் தேவை அல்லது வேறு ஏதேனும் "புறம்பான அல்லது பொருத்தமற்றப் பரிசீலனைகள்" போன்ற பல்வேறு காரணங்களுக்காக ஒரு மசோதாவை குடியரசுத் தலைவரின் மறு பரிசீலனைக்காக என்று ஒதுக்கச் செய்வது அரசியலமைப்பால் கண்டிப்பாக அனுமதிக்கப் படாது என்று உச்ச நீதிமன்றமானது தெளிவாக தீர்ப்பளித்துள்ளது.
- இந்தக் காரணங்களுக்காக ஓர் ஆளுநர் ஒரு மசோதாவைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவது அரசியலமைப்பு அடிப்படையிலான நீதிமன்றங்களால் உடனடியாக ரத்து செய்யப்பட வாய்ப்புள்ளது.
- ஜனநாயகக் கொள்கைகளுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் தெளிவாக வரையறுக்கப்பட்ட காரணங்களின் மீதான அடிப்படையில் மட்டுமே ஒரு மசோதாவை குடியரசுத் தலைவரின் மறு பரிசீலனைக்கு ஒதுக்க வேண்டும் என்று நீதிமன்றமானது விளக்கியுள்ளது.
- ஆளுநர் போதுமான காரணங்களை வழங்கத் தவறியதன் ஒரு அடிப்படையில் மாநில

அரசுகள் அத்தகைய பரிசீலனை ஒதுக்கீட்டினை எதிர்த்து வழக்குத் தொடரலாம்.

- ஒரு ஆளுநர் மூன்று மாத கால வரம்பைத் தாண்டி ஒரு மசோதாவினை நிலுவையில் வைத்திருந்தால், அந்த மாநில அரசு ஆனது செயலுறுத்தும் நீதிப்பேராணையின் கீழ் அதிகாரம் வாய்ந்த நீதிமன்றத்தை அணுகலாம்.
- உயர் பதவிகளில் உள்ள அரசியலமைப்பு நிர்வாக அதிகாரிகள் அரசியலமைப்பின் விழுமியங்களால் வழி நடத்தப்பட வேண்டும் என்பதை உச்ச நீதிமன்றம் மிக வலுவாக நினைவூட்டி உள்ளது.

## தமிழக அரசு மற்றும் ஆளுநர் இடையிலான சர்ச்சைகள்




- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதல் எதுவும் அளிக்காமல் இருந்தால், அது "அம்மசோதா காலாவதியாகி விட்டது" என்று பொருள் என ஆளுநர் அறிவித்தார்.
- தனது ஒப்புதலை நிறுத்தி வைப்பதை "அம்மசோதாவானது செயல்பாட்டிற்கு வராதது" என்பது அது காலாவதியாகி விட்டது என்பதைக் குறிக்கிறது என்று உச்ச நீதிமன்றம் மிக நன்கு வரையறுத்துள்ளது என்று அவர் வாதிட்டார்.
- ஆனால், 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், பஞ்சாப் மாநில ஆளுநரின் வழக்கைக் கையாளும் போது உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு ஆனது, ஓர் ஆளுநர் ஒரு மசோதாவை நிராகரிப்பது அதன் செயல் இழப்பைக் குறிக்காது என்று கூறியது.
- ஒரு மாநிலச் சட்டமன்றத்தினால் முன்மொழியப்பட்ட ஒரு சட்டம் ஆனது, ஆளுநர் தனது ஒப்புதலில் கையெழுத்திட மறுப்பதால் மட்டும் செயலிழந்து விடாது.
- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில இளங்கலை மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கை அனுமதி மசோதாவினை சட்டமன்றச் சபாநாயகரிடம் ஆளுநர் ரவி திருப்பி அனுப்பினார்.
- MBBS/BDS படிப்புகளுக்கு NEET தேர்வு அடிப்படையிலான சேர்க்கையிலிருந்து விலக்கு அளிக்கவும், அதற்குப் பதிலாக 12 ஆம் வகுப்பு வாரியத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் மாணவர்களைச் சேர்க்கவும் மசோதா கோரியது.
- நீதிபதி A.K. ராஜன் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த மசோதாவானது உருவாக்கப் பட்டது.
- தமிழக சட்ட சபை, முதல் முறையாக, ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட மசோதாவை

மீண்டும் ஏற்றுக் கொண்டு, அதை மீண்டும் ராஜ்பவனுக்கு அனுப்பியது.

- இந்த முறை, ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்க மறுத்து விட்டார் என்ற நிலைமையில் அதை அவர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார்.
- 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், பணமோசடி மீதான ஒரு வழக்கில் அமலாக்க இயக்குநகரத்தினால் கைது செய்யப்பட்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு, ஆளுநர் அவர்கள் V. செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து உடனடியாக அமலுக்கு வரும் வகையில் அவரைப் பதவியில் இருந்து நீக்கினார்.
- ஆனால், முதல்வர் திரு.செந்தில் பாலாஜியை இலாகா இல்லாத ஒரு அமைச்சராகப் பதவியில் தக்க வைத்துக் கொண்டார்.
- பின்னர் அதே நாளில், ஆளுநர் தனது முடிவில் இருந்து உடனடியாகப் பின்வாங்கினார்.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், ஊழல் வழக்கில் உச்ச நீதிமன்றம் விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்திருந்த போதிலும், K. பொன்முடியை மீண்டும் மாநில அமைச்சரவையில் சேர்க்க ஆளுநர் மறுத்துவிட்டார்.
- பின்னர் இந்தியத் தலைமை நீதிபதி, மீண்டும் அவரை அமைச்சர் பதவியில் இணைக்க மறுத்ததன் காரணமாக, "இந்திய உச்ச நீதிமன்றத்தின் உத்தரவினை மீறியதற்காக" என்று ஆளுநரைக் கடுமையாக சாடினார்.
- பின்னர் திரு.பொன்முடிக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் மற்றும் இரகசியக் காப்புப் பிரமாணம் செய்து வைத்தார்.
- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், சென்னை ஆளுநர் மாளிகையின் பிரதான வாயிலில் ஒருவர் மொலோடோவ் மதுபானக் கலவைக் குடுவையை வீசினார்.
- ஒரு நாள் கழித்து, ஆளுநர் மாளிகையானது, காவல்துறை அந்தத் தாக்குதலை வெறும் "வன்முறை நடவடிக்கை" எனக் கூறி தட்டிக் கழித்ததாக குற்றம் சாட்டியது.
- அதைத் தொடர்ந்து, இந்த வழக்கின் மீதான விசாரணையை மேற்கொண்ட தேசியப் புலனாய்வு முகமை ஆனது, இந்தத் தாக்குதலில் பலருக்குப் பங்குள்ளது அல்லது மிகத் தீவிரமான தாக்குதலில் ஈடுபட்டனர் என்ற ஆளுநரின் கூற்றை நிராகரித்தது.

# தேசியச் செய்திகள்

## குடியரசுத் தலைவருக்கு உச்ச நீதிமன்றம் விதித்த காலக்கெடு

| Action by Governor | Time Limit | Conditions |
|---|---|---|
| (i) Withholding assent / Reserving for President | 1 month | With aid/advice of Council |
| (ii) Withholding assent against advice | 3 months | Must return with reasons |
| (iii) Reservation against advice | 3 months | Must send to President within time |
| (iv) Reconsidered Bill (after Assembly resends it) | 1 month | Must assent |

- ஆளுநர் பரிந்துரைத்த மாநில அரசின் மசோதாக்களுக்கு தனது ஒப்புதலை அளிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்ய குடியரசுத் தலைவருக்கு மூன்று மாதங்கள் காலக் கெடுவை உச்ச நீதிமன்றம் விதித்துள்ளது.
- ஆளுநர் மசோதாவைக் குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைத்த நாளிலிருந்து இந்த எண்ணிக்கை தொடங்குகிறது.

- இந்தக் காலக்கெடுவுக்கு மேல் வேறு ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், பொருத்தமான காரணங்களைப் பதிவு செய்து சம்பந்தப்பட்ட மாநில அரசிற்கு உடன் அவர் அதனைத் தெரிவிக்க வேண்டும்.
- மாநில அரசுகள் அந்த மசோதாக்கள் குறித்து மத்திய அரசிடமிருந்து வரும் கேள்விகள் அல்லது பரிந்துரைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும்.
- குடியரசுத் தலைவர் செயலறிவு நுட்பம் சார்ந்த நடவடிக்கையாக, அரசியலமைப்புக்கு முரணானதாகக் கருதப்படும் அடிப்படையில், ஆளுநர் பரிசீலனைக்காக ஒதுக்கிய அந்த மசோதாக்கள் குறித்து உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற வேண்டும்.
- குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் குடியரசுத் தலைவர் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால், குடியரசுத் தலைவருக்கு எதிராக மாநில அரசு நீதிப்பேராணை மனு ஒன்றைத் தாக்கல் செய்யலாம்.
- 201வது சரத்தின் கீழ், மாநில அரசின் மசோதா மீது குடியரசுத் தலைவர் முழுமையான தடையுறுத்து அதிகாரத்தினைப் பயன்படுத்த முடியாது என்பதோடு இந்தத் தீர்ப்பு ஒரு 'காலாவதியான' மசோதாவையும் மீட்டெடுப்பதற்கு வழி வகுக்கும்.
- அரசியலமைப்பின் படி, ஒரு மசோதா திருப்பி அனுப்பப்பட்டவுடன், அல்லது குடியரசுத் தலைவர் அதற்கு ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் வைத்திருந்தால் அந்தச் சட்டம் காலாவதியாகிவிடும்.
- சட்டமன்றம் விரும்பிய படி, பரிந்துரைக்கப்பட்ட சில திருத்தங்களுடன் அல்லது எந்த திருத்தமும் இல்லாமல், அதை நிறைவேற்றுவதற்காக என்று அதைச் சட்டமன்றத்தில் மீண்டும் அறிமுகப்படுத்தலாம்.
- ஆனால் கடந்த ஏப்ரல் 08 ஆம் தேதியன்று வழங்கப்பட்ட தீர்ப்பு இந்த காரணத்தைக் கருத்தில் கொள்ளவில்லை.

## பால்னா திட்டம்




- 2022 ஆம் ஆண்டில், 'சக்தி திட்டத்தின்' துணைத் திட்டமான 'சாமர்த்யா' திட்டத்தின் கீழ், முந்தையத் தேசியக் குழந்தைகள் காப்பகத் திட்டம் மறுசீரமைக்கப்பட்டு பால்னா திட்டம் என அது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இது 6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஒரு மிக விரிவான பராமரிப்புச் சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சேவைகள் போஷான் 2.0 என்ற திட்டத்துடன் இணைந்து குழந்தைப் பருவப்

பராமரிப்பு, வளர்ப்பு மற்றும் ஊட்டச்சத்தை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன.

- பால்னா திட்டத்தின் மூலம் பகல்நேரக் காப்பக வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 2024 ஆம் ஆண்டிற்கான முக்கிய வேலைவாய்ப்பின்மை குறிகாட்டிகள்

- நகர்ப்புறங்களில், ஆண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (LFPR) என்பது நன்கு அதிகரித்துள்ளது (2023 ஆம் ஆண்டில் 74.3% ஆக இருந்த இது 2024 ஆம் ஆண்டில் 75.6% ஆக உயர்ந்தது) என்பதோடு பெண்கள் மத்தியில் இது சிறிது அதிகரித்துள்ளது (25.5% ஆக இருந்த இது 25.8% ஆக உயர்ந்தது).
- இது LFPR விகிதத்தில் (50.3% முதல் 51.0% வரை) ஒட்டு மொத்த உயர்வுக்கு நன்கு வழி வகுக்கிறது.
- பல்வேறு பிரிவுகளில் சிறிய அளவில் வேறுபாடுகள் இருந்தபோதிலும், ஒட்டு மொத்த LFPR விகிதமானது 56.2% ஆக மாறாமல் இருந்தது.
- ஒட்டுமொத்தத் தொழிலாளர் மக்கள்தொகை விகிதம் (WPR) ஆனது, நகர்ப்புறங்களில் 47.0 சதவீதத்திலிருந்து 47.6% ஆக அதிகரித்துள்ளது.
- அகில இந்திய அளவில் ஒட்டுமொத்த WPR ஆனது ஒப்பீட்டளவில் மாறாமல் இருந்தது (53.4% சதவீதத்திலிருந்து 53.5% ஆக உயர்ந்தது).
- கிராமப்புறங்களில், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வேலைவாய்ப்பின்மையில் சற்று சரிவுடன் ஒட்டு மொத்த வேலைவாய்ப்பின்மையில் சிறிது சரிவு பதிவானது (4.3 சதவீதத்திலிருந்து 4.2% ஆக குறைந்தது).
- நகர்ப்புற ஆண்களின் வேலைவாய்ப்பின்மை அதிகரித்து (6.0 சதவீதத்திலிருந்து 6.1% ஆக உயர்ந்தது), பெண்களின் வேலைவாய்ப்பின்மை குறைந்தாலும் (8.9 சதவீதத்தில் இருந்து 8.2% ஆக குறைந்தது) ஒட்டு மொத்த நகர்ப்புற விகிதம் 6.7% ஆக நிலையாக உள்ளது.
- அகில இந்திய அளவில், வேலைவாய்ப்பின்மையில் 5.0 சதவீதத்திலிருந்து 4.9% ஆக ஒரு சிறிய வீழ்ச்சிப் பதிவாகியது.
- அகில இந்திய அளவில், தொழிலாளர் மக்கள் தொகை விகிதத்தில் (WPR) சுமார் 58.0 சதவீதத்திலிருந்து 57.7% ஆக ஒரு சிறிய சரிவானது பதிவாகியுள்ளது.

| Indicator | Rural | | | Urban | | | Rural + Urban | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | male | female | person | male | female | person | male | female | person |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| January 2023 – December 2023 | | | | | | | | | |
| LFPR | 79.8 | 47.3 | 63.4 | 74.9 | 27.2 | 51.4 | 78.3 | 41.3 | 59.8 |
| WPR | 77.7 | 46.4 | 61.9 | 71.6 | 25.2 | 48.8 | 75.8 | 40.1 | 58.0 |
| UR | 2.7 | 1.9 | 2.4 | 4.4 | 7.5 | 5.2 | 3.2 | 3.0 | 3.1 |
| January 2024 – December 2024 | | | | | | | | | |
| LFPR | 80.6 | 45.8 | 62.9 | 76.2 | 27.6 | 52.2 | 79.2 | 40.3 | 59.6 |
| WPR | 78.4 | 44.8 | 61.4 | 72.8 | 25.8 | 49.6 | 76.6 | 39.0 | 57.7 |
| UR | 2.8 | 2.1 | 2.5 | 4.4 | 6.7 | 5.0 | 3.3 | 3.1 | 3.2 |

## 5வது மற்றும் 6வது பட்டியலிடப்பட்டப் பகுதிகளில் சுரங்க குத்தகைகள்

- இந்திய நாட்டின் 5வது மற்றும் 6வது பட்டியலிடப்பட்டப் பகுதிகளின் கீழ் உள்ளடங்கிய மாநிலங்களில் உள்ள முக்கியக் கனிமங்களின் மீதான சுரங்க குத்தகைகளின் மாநில

வாரியான மொத்தப் பகுதிகள் மற்றும் செயல்பாட்டில் உள்ள சுரங்கங்களின் மொத்த எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

- சுரங்கக் குத்தகை மூலம் கிடைக்கும் வருவாய் என்பது மாநில அரசுகளிடம் வழங்கப் படுகிறது.
- கடந்த 5 ஆண்டுகளில் (2020-21 ஆம் ஆண்டு முதல்) மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள பட்டியலிடப்பட்டப் பகுதிகளில் சுமார் 107 ஹெக்டேர் பரப்பளவிலான 7 சுரங்கக் குத்தகைகள் வழங்கப் பட்டுள்ளன.

| State | Total Number of Leases | Sum of Total Lease Area (in Ha.) | Number of Operational/ Working Leases |
|---|---|---|---|
| **Andhra Pradesh** | 27 | 657 | 10 |
| **Assam** | 6 | 859 | 4 |
| **Chhattisgarh** | 78 | 16146 | 38 |
| **Gujarat** | 3 | 1108 | 2 |
| **Jharkhand** | 31 | 4548 | 4 |
| **Madhya Pradesh** | 153 | 6318 | 77 |
| **Maharashtra** | 50 | 7102 | 33 |
| **Meghalaya** | 23 | 825 | 15 |
| **Odisha** | 127 | 40023 | 79 |
| **Rajasthan** | 17 | 6715 | 14 |
| **Telangana** | 15 | 1835 | 6 |
| **Grand Total** | **530** | **86136** | **282** |

## எண்ணிம அச்சுறுத்தல் குறித்த அறிக்கை 2024





- இது இந்தியக் கணினியிய அவசரகால மீட்பு நிறுவனத்தினால் (CERT-In) மற்ற உலகளாவிய நாடுகளுடன் இணைந்து வெளியிடப்பட்ட அறிக்கையாகும்.
- 2025 ஆம் ஆண்டில் மிக அதிகளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடிய பிரிவுகளாக எதிர்பார்க்கப் படும் 7 முக்கியத் தாக்குதல் காரணிகளை இந்த அறிக்கை அடையாளம் கண்டுள்ளது.
- இதில் செயற்கை நுண்ணறிவு சார் போலி உருவங்கள் மற்றும் சமூகப் பொறியியல்,

தீங்கிழைக்கும் வகையிலான செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் மற்றும் இணைய சங்கேதப் பணங்கள் மற்றும் இணையவழி குற்றம் போன்றவை அடங்கும்.

- இந்தியாவின் முக்கிய இணைய சங்கேதப் பணப் பரிமாற்றத் தளங்களில் ஒன்றான WazirX, சைபர் தாக்குதலால் பாதிக்கப்பட்டது என்பதோடு இணைய சேவை முடக்கம் செய்யும் நபர்கள், அத்தளத்தின் 230 மில்லியன் டாலருக்கும் அதிகமான மதிப்பிலான இணைய சங்கேதப் பண இருப்புகளில் சுமார் பாதி அளவினைத் திருடியதாகக் கூறப் படுகிறது.
- சமீபத்தில், துபாயில் உள்ள Bybit எனப்படுகின்ற ஓர் இணைய சங்கேதப் பணப் பரிவர்த்தனை நிறுவனத்திடமிருந்து சுமார் 1.5 பில்லியன் டாலருக்கும் அதிகமான மதிப்பு உள்ள எண்ணிமச் சொத்துக்களை திருடியுள்ளனர் என்ற ஒரு நிலையில் இது இன்று வரையில் பதிவான மிகப்பெரியதான இணைய சங்கேதப் பணத் திருட்டு என்று கூறப் படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆசிய மற்றும் பசிபிக் பொருளாதாரம் மற்றும் சமூகம் ஆய்வு 2025




- ஐக்கிய நாடுகள் சபையின் ESCAP அமைப்பானது, 2025 ஆம் ஆண்டு ஆசிய மற்றும் பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆய்வறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இது ஆசிய-பசிபிக் பொருளாதாரங்கள், மிகத் தீவிரமடைந்து வரும் கடும் பருவநிலை நெருக்கடிகள் மற்றும் பசுமை மாற்றங்களுக்குப் போதுமான தயார்நிலையின்மை காரணமாக பெரும் பொருளாதார அளவிலான அபாயங்களை எதிர்கொள்கின்றன என்று எச்சரித்துள்ளது.
- ஆசிய-பசிபிக் பகுதியைச் சேர்ந்த சில வளர்ந்து வளரும் பொருளாதாரங்கள், 2023 ஆம் ஆண்டில் இருந்த சுமார் 5.2 சதவிகிதத்தில் இருந்து சிறிது குறைந்து, 2024 ஆம் ஆண்டில் சராசரியாக 4.8 சதவிகிதம் வளர்ச்சி அடைந்துள்ளன.
- பலவீனமான வெளிப்புறத் தேவைகள், பலவீனமானச் சந்தைச் சார்புகள் காரணமாக பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி 2025-2026 ஆம் ஆண்டில் 4.4-4.5 சதவீதமாக குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- கடும் பருவநிலை நெருக்கடிகள் ஆனது, சில ஆசிய-பசிபிக் நாடுகளில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு குறைந்த பட்சம் சுமார் 6% அளவிற்கு வருடாந்திரப் பொருளாதார இழப்பை ஏற்படுத்தலாம்.
- பருவநிலை காரணமாக மிக அதிகம் பாதிக்கப்படக்கூடிய நாடுகள் என அடையாளம் காணப் பட்ட 30 நாடுகளில் 11 நாடுகள் இப்பகுதியில் அமைந்துள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★